# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

## பரிசுத்த ஆவியானவர் (பகுதி – 3)

**முன்னுரை :**

பரிசுத்த ஆவியானவர் என்ற போதனையின் வரிசையில் இதுதான் கடைசிப் பாடமாகும். உலகம் முழுவதும் பரிசுத்த ஆவியானவருக்கும், அவரது பணிக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படும் காரணத்தினால், இப்பாடத்திற்கு மிகுந்த கவனத்தைச் செலுத்துவது மிகவும் அவசியம் என்பதை நாங்கள் உணர்ந்தோம். பாடம் 6–ல், திரித்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவர் உண்மையான தெய்வீக நபர் என்பதை வழங்கினோம். இவரின் அடையாளங்கள், பெயர்கள் இவற்றைக் குறிப்பிட்டுள்ளோம். பாடம் 7–ல் சிருஷ்டிப்பில், பழைய ஏற்பாட்டில், வேதாகமத்தில், கிறிஸ்துவின் வாழ்க்கையில், அவிசுவாசிகள் இவைகளோடு தொடர்புடைய பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன என்பதை ஆலோசித்தோம். இந்த 3–ம் பகுதியில் விசுவாசிகளின் ஜீவியத்தில் அவரது பணி, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம், வரங்கள், ஆவியானவரின் நிறைவு, பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் எவ்விதம் நிரப்பப்பட முடியும் என்பதை உங்களுக்கு முன் வைக்க விரும்புகிறோம்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

பரிசுத்த ஆவியானவருடைய பணியின் முழு விகிதத்தை, ஒவ்வொரு விசுவாசியும் எவ்விதமாகக் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைச் சரியாக அறிந்திருக்க வேண்டும். இந்தக் காரியத்தில்தான் ஏராளமான குழப்பங்களும், தவறுதலாகப் புரிந்துகொள்ளுதலும் காணப்படுகிறது. இன்றைக்குச் சபையில் பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன என்பதைத் தெளிவுபடுத்த இப்பாடத்தில் முயற்சித்துள்ளோம். அனைத்து விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார் (எபேசியர் 5:18).சுவிசேஷத்தை வல்லமையாய்ப் பகிர்ந்துகொள்ளுவதற்கும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கும், வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கும், கிறிஸ்துவை அறிந்துகொள்வதற்கும் இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள சத்தியங்களை முழுமையாகப் புரிந்து இறுகப் பற்றிக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

**பாடம்**

## I. விசுவாசிகளின் ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவரின் பணி :

**1. மறுபிறப்படையச் செய்கிறார் :**

அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்திருந்த நமக்குப் புதிய ஜீவனைத் தந்திருக்கிறார் (எபேசியர் 2:1) ஒரு விசுவாசி, பரிசுத்த ஆவியானவரின் மூலமாக மறுபிறப்பை அடைந்திருக்கிறார் (யோவான் 3:5–8, 6:63).

**குறிப்பு :**

பரிசுத்த ஆவியானவர் ஒருவரின் பாவத்தைக் கண்டித்து உணர்த்தும்பொழுது அவர் மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறார் (அப்போஸ்தலர் 20:21, 2:38–41). பரிசுத்த ஆவியானவர் அந்த நபருக்குப் புதிய ஜீவனைக் கொடுக்கிறார் (2 கொரிந்தியர் 5:17; 1 பேதுரு 1:4).

**2. ஞானஸ்நானம் கொடுக்கிறார்: (1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:27; ரோமர் 6:3)**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு விசுவாசி அங்கத்தினராவதை இந்த ஞானஸ்நானம் குறிக்கிறது (எபேசியர் 5:30).

**3. முத்திரையிடுகிறார் : (எபேசியர் 1:13,14, 4:30; 2 கொரிந்தியர் 1:22)**

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்வதால், நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது (2 தீமோத்தேயு 2:19). மேலும் நாம் அவருடைய பிள்ளைகள் என்பதை பரிசுத்த ஆவியானவர் உறுதிப்படுத்துகிறார்.

**4. நமக்குள் வாசம்பண்ணுகிறார் : (யோவான் 14:17, 1 கொரிந்தியர் 6:19)**

''வாசம் செய்தல்'' என்றால் நமக்குள் வசிப்பது அல்லது தங்கியிருப்பது என்பதாகும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்கி வசிக்க ஆரம்பிக்கிறார் (யோவான் 15:4,5, 14:16,17).

**5. நிச்சயப்படுத்துகிறார் : (ரோமர் 8:16; கலாத்தியர் 4:6)**

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று சாட்சி பகர்கிறார். நாம் மகிமையைச் சுதந்தரிப்போம் என்பதற்கான அச்சாரமாக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் (எபேசியர் 1:14; 2 கொரிந்தியர் 5:5).

**6. நம்மை வழிநடத்துகிறார் : (ரோமர் 8:14; கலாத்தியர் 5:16,25)**

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துலுக்கு ஏற்றாற்போல நாம் நடந்து கொள்ள வேண்டும்.

**7. நம்மைத் திருப்தியாக்குகிறார் : (யோவான் 4:13,14)**

''. . . நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது . . . '' (யோவான் 4:13,14). பரிசுத்த ஆவியானவர் நம்மைத் திருப்திப்படுத்தும் ஜீவ நதியாக இருக்கிறார்.

**8. நமக்குப் போதிக்கிறார் : (யோவான் 14:26, 16:13; 1 கொரிந்தியர் 2:9–14)**

சகல சத்தியங்களையும் நாம் அறிந்துகொள்வதற்கு உதவும் தெய்வீக ஆசிரியராக இவர் இருக்கிறார்.

**9. நம்மை நிரப்புகிறார் : (அப்போஸ்தலர் 2:4, 4:8,31; எபேசியர் 5:18)**

பரிசுத்த ஆவியானவர் நம்மை அன்பினாலும், சந்தோஷத்தினாலும், ஞானத்தினாலும், சமாதானத்தினாலும் நிரப்புகிறார்.

**10. நம்மைப் பெலப்படுத்துகிறார் : (அப்போஸ்தலர் 1:8)**

பாவத்தின் சட்டத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான வல்லமையை அவர் நமக்குத் தருகிறார் (ரோமர் 8:2). நாம் சாட்சி பகர்வதற்கான வல்லமையை அவர் நமக்குத் தருகிறார் (அப்போஸ்தலர் 1:8; 1 கொரிந்தியர் 2:4; 1 தெசலோனிக்கேயர் 1:5). ஜெபிப்பதற்கான வல்லமையை அவர் நமக்குத் தருகிறார் (ரோமர் 8:26,27). கனிகொடுப்பதற்கான வல்லமையை அவர் நமக்குத் தருகிறார் (கலாத்தியர் 5:22).

## II. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் :

1. இந்தப் பதத்தைப் பயன்படுத்துவதில் அநேக கருத்து வேறுபாடுகளும், குழப்பங்களும் காணப்படுகிறது. முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்ட அல்லது பாவமில்லாத பரிபூரணத் தன்மையை சிலர் குறிப்பிடுகின்றனர். வேறு சிலர் பற்பல பாஷைகளைப் பேசும் தன்மையைக் குறிப்பிடுகின்றனர்.
2. புதிய ஏற்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட ஞானஸ்நானம் இருக்கிறது என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ள சிலர் விரும்பாததினாலும் அல்லது தோற்றுப்போவதினாலும் இந்தக் குழப்பங்கள் காணப்படுகிறது. **அவைகள் :**

**அ. யோவானின் ஞானஸ்நானம் : (அப்போஸ்தலர் 1:21)**

இந்த ஞானஸ்நானம் முற்றிலும் இஸ்ரவேலுக்குத் தொடர்புடையதாகும் (மத்தேயு 3:1,2; லூக்கா 7:29).

இது மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானம் ஆகும் (லூக்கா 3:6; அப்போஸ்தலர் 13:24). இஸ்ரவேல் ஜனங்கள் தங்களின் பாவங்களை மறந்து கர்த்தரிடம் திரும்பும்படி யோவான் அவர்களை அழைத்தான். அவர்களின் உண்மையான மனந்திரும்புதலுக்கு அடையாளமாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

**ஆ. தண்ணீர் ஞானஸ்நானம் : (அப்போஸ்தலர் 8:36–39)**

கிறிஸ்துவும்கூட தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்தார் (மாற்கு 1:9,10). தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளை கொடுத்தார் (மத்தேயு 28:19). கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் இதற்கு அடையாளமாக இந்த ஞானஸ்நானம் இருக்கிறது (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). இந்த ஞானஸ்நானத்தைக்குறித்து கீழ்க்கண்ட பகுதிகளில் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 8:12, 36–39, 16:33).

**இ. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் : (1 கொரிந்தியர் 12:13)**

ஒரு நபர் மனந்திரும்பி, கிறிஸ்துவை விசுவாசித்து, தனது சொந்த இரட்சகராக அவரை ஏற்றுக் கொள்ளும்பொழுது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவர் அங்கத்தினராக மாறுகிறார். இதுவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் ஆகும் (ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:27; 1 கொரிந்தியர் 12:13,27; எபேசியர் 2:15,16, 5:30).

**ஈ. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் ஞானஸ்நானம் : (அப்போஸ்தலர் 1:4)**

1. கிறிஸ்துவானவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான்ஸ்நானகன் கூறியிருக்கிறார் (மத்தேயு 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16; யோவான் 1:33; லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:5,8, 2:33).
2. லூக்கா 24:49–ல் கூறிய வாக்குத்தத்தத்தை அப்போஸ்தலர் 1:5–8 வசனங்களில் மறுபடியும் உறுதி செய்திருக்கிறதைப் பார்க்கிறோம். ‘‘என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.’’
3. பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் குறித்ததான இந்த வாக்குத்தத்தம் அப்போஸ்தலர் 2–ம் அதிகாரத்தில் நிறைவேறியது.
4. பரிசுத்த ஆவியானவர் வந்தபொழுது அனைவரும் அவருடைய வல்லமையினால் நிரப்பப்பட்டனர் (அப்போஸ்தலர் 1:8, 2:4).

**3. அப்போஸ்தலர் 1:4; 1 கொரிந்தியர் 12:13 ஆகிய வசனங்களில் உள்ள முக்கிய அம்சங்கள் :**

**அ. மக்களைப் பொருத்த வரையில் :**

1 கொரிந்தியர் 12:13 – இரட்சிக்கப்பட்டவர்கள்.

அப்போஸ்தலர் 1:4–8 – ஆவியானவரின் வல்லமையினால் நிரப்பப்பட்டவர்கள்.

**ஆ. பொறுப்பைப் பொருத்த வரையில் :**

1 கொரிந்தியர் 12:13 – கிறிஸ்துவானவர் இரட்சிப்பிற்கான அனைத்துக் காரியங்களையும் செய்து முடித்து விட்டார்.

அப்போஸ்தலர் 1:4–8 – சீஷர்கள் வல்லமையினால் நிரப்பப்படுவதற்குக் காத்திருந்தார்கள்.

**இ. ஞானஸ்நானம் கொடுப்பவரைப் பொருத்த வரையில் :**

1 கொரிந்தியர் 12:13 – எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

அப்போஸ்தலர் 1:4–8 – கிறிஸ்து ஆவியானவரின் வல்லமையினால் நம்மை நிரப்புகிறார்.

**ஈ. நோக்கத்தைப் பொருத்த வரையில் :**

1 கொரிந்தியர் 12:13 – கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் நிலையைத் தொடர்புபடுத்துகிறது.

அப்போஸ்தலர் 1:4–8 – ஆவியானவரின் வல்லமையைத் தொடர்புபடுத்துகிறது.

**உ. விளைவைப் பொருத்த வரையில் :**

1 கொரிந்தியர் 12:13– ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்பொழுது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினராக மாறுகிறார்.

அப்போஸ்தலர் 1:4–8 – இரட்சிக்கப்பட்ட சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நிரப்பப்பட்டார்கள்.

4. எனவே, ஞானஸ்நானத்தைக்குறித்துப் போதிக்கும்பொழுது எந்த ஞானஸ்நானம் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.
5. எபேசியர் 4:5, ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் என்றால் என்ன?

ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, அவரின் சரீரமாகிய சபையில் அங்கத்தினராகாத பட்சத்தில், பரலோகம் செல்லமுடியாது (I கொரிந்தியர் 12:13).

**குறிப்பு :**

மத்தேயு 18:16 –ல் ‘‘இரண்டு, மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்’’ என்று இயேசுவானவர் கூறினார்.

**பெரிய இரண்டு சாட்சிகள் :**

அ. தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு என்னை ஒப்புக் கொடுக்கும்பொழுது, ஏற்கனவே எனது ஜீவியத்தில் ஏற்பட்ட இரட்சிப்பின் அனுபவத்தை இந்த உலகத்திற்குத் தெரிவிக்கிறேன் (ரோமர் 6:4,5).

ஆ.கிறிஸ்து என்னை ஆவியானவரின் வல்லமையினால் நிரப்புவது மற்றொரு சாட்சியாகும் (அப்போஸ்தலர் 1:8).

## III. பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் :

(1 கொரிந்தியர் 12:1–11; ரோமர் 12:6–8; எபேசியர் 4:8–13 இந்த வசனங்களைக் கவனமாக வாசிக்கவும். புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ 21 வரங்கள் காணப்படுகிறது. கீழ்க்கண்ட வரங்கள் கவனிக்கப்பட வேண்டும்.)

1. வரங்கள் என்று கூறினாலே அவைகள் இலவசம். எவரும் அவைகளை விலை கொடுத்து வாங்க முடியாது. அவைகளுக்காக கெஞ்சி, மன்றாடி பெறக்கூடாது. தேவன் அவைகளை இலவசமாகக் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 12:7).
2. தேவனின் கிருபையால் அவரின் சித்தத்தின்படி இந்த வரங்கள் கொடுக்கப்படுகிறது (ரோமர் 12:6; 1 கொரிந்தியர் 12:11). நமது தெரிந்தெடுப்பின்படியல்ல.
3. வரங்களில் வித்தியாசம் உண்டு (1 கொரிந்தியர் 12:4). ஒவ்வொரு வரத்திற்கும் முக்கிய நோக்கம் இருக்கிறது (1 கொரிந்தியர் 12:5,6)
4. இந்த வரங்கள் அனைத்தும் கிறிஸ்துவினால் ஆளுகை செய்யப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 12:5). தங்களைப் பிரியப்படுத்தும் வகையில் வரங்களைப் பயன்படுத்தக்கூடாது.
5. ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏதாவது வரங்கள் கொடுக்கப்படுகிறது (1 கொரிந்தியர் 12:7,11)
6. எந்த ஒரு வரமும் மற்ற வரத்தைக்காட்டிலும் மேன்மையானதோ அல்லது குறைவானதோ கிடையாது (1 கொரிந்தியர் 12:18–25).
7. ஒரு வரம் மற்றொரு வரத்தைக்காட்டிலும் அதிக ஆவிக்குரியது என்று கருதக்கூடாது. ஒருவர் வரம் பெற்றிருப்பதினால் மற்ற நபரின்மேல் ஆளுகை செலுத்தக்கூடாது.
8. அந்நியபாஷை வரங்களில் ஒன்றாகும் (1 கொரிந்தியர் 12:10). இது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றதற்கு அடையாளம் அல்ல.

## IV. பரிசுத்த ஆவியானவரின் நிறைவு :

1. வேதாகமம் தேவனின் பரிபூரணத்தைக்குறித்தும், கிறிஸ்துவின் பரிபூரணத்தைக்குறித்தும், ஆவியானவரின் பரிபூரணத்தைக்குறித்தும் பேசுகிறது (எபேசியர் 3:19, 4:11, 5:18).

   <u>குறிப்பு :</u> திரியேக தேவன், நாம் அவரால் நிரப்பப்பட வேண்டுமென விரும்புகிறார்.

2. புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரின் பணியை நம்முடன் இருந்து, நமக்குள் இருந்து, நம்மேல் வந்து இறங்கி என மூன்று நிலைகளில் கொடுக்கிறது (யோவான் 14:16,17; அப்போஸ்தலர் 1:8).

**அ. நம்முடன் இருந்து செய்யும் பரிசுத்த ஆவியானவரின் பணி :**

| | | |
|---|---|---|
| 1. பாவத்தை உணர்த்துகிறார் | .. | யோவான் 16:8 |
| 2. மறுபிறப்படையச் செய்கிறார் | .. | யோவான் 3:5–8 |
| 3. ஆறுதல் அளிக்கிறார் | .. | யோவான் 14:16 |
| 4. போதிக்கிறார் | .. | யோவான் 14:26 |
| 5. கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்துகிறார் | .. | யோவான் 16:13–15 |
| 6. நடத்துகிறார் | .. | ரோமர் 8:14 |
| 7. நமக்குள் தங்கி இருக்கிறார் | .. | யோவான் 14:16 |

**ஆ. நமக்குள் இருந்து செய்யும் பரிசுத்த ஆவியானவரின் பணி :**

| | | |
|---|---|---|
| 1. நமக்குள் தங்கி, நமது சரீரத்தை அவரது ஆலயமாக்கிக் கொள்கிறார் | .. | 1 கொரிந்தியர் 6:19 |
| 2. கனி கொடுப்பவர்களாக நம்மை மாற்றுகிறார் | .. | கலாத்தியர் 5:22 |
| 3. நமது பெலவீனங்களில் நமக்கு உதவுகிறார் | .. | ரோமர் 8:26,27 |
| 4. நமது இரட்சிப்பை நமக்கு உறுதிப்படுத்துகிறார் | .. | ரோமர் 8:16; கலாத்தியர் 4:6,7 |
| 5. மாம்சத்தின்மேல் வெற்றி கொடுக்கிறார் | .. | கலாத்தியர் 5:16 |
| 6. நம்மை சுத்திகரிக்கிறார் | .. | ரோமர் 15:15 |

இ. பரிசுத்த ஆவியானவர் நம்மேல் வந்து இறங்கி, நமக்குள் என்றென்றும் தங்கியிருப்பார் என்கிற வாக்குத்தத்தம் நிறைவேறிவிட்டது – அப்போஸ்தலர் 1:8, 2:17; 2 கொரிந்தியர் 12:9; 1 பேதுரு 4:14.

## V. நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் எவ்விதம் நிரப்பப்படலாம் :

**1. இளைப்பாறுதலின் மூலம் :**

கிறிஸ்து செய்து முடித்தப் பணியின் மூலம் இரட்சிப்பைப் பெற்று அவருக்குள் இளைப்பாறுவது (மத்தேயு 11:28,29).

**2. வாஞ்சிப்பதன் மூலம் :**

தேவனின் வல்லமைக்காக நாம் வாஞ்சிக்க வேண்டும் (மத்தேயு 5:6; யோவான் 7:37–39).

**3. அறிக்கை செய்வதன் மூலம் :**

தேவனிடத்தில் கிட்டிச்சேர முயற்சிக்கும் பொழுதெல்லாம் பாவத்தை முற்றிலுமாக அறிக்கை செய்யவேண்டும் (1 யோவான் 1:8,9; நீதிமொழிகள் 28:13).

**4. மறப்பதன் மூலம் :**

அ. மாம்சத்தின்மேல் உள்ள நம்பிக்கையை மறந்துவிட வேண்டும் (2 கொரிந்தியர் 12:7–9).

ஆ. உலக தாலந்துகளின்மேல் உள்ள நம்பிக்கையை மறந்துவிட வேண்டும் (பிலிப்பியர் 3:7–10). பாரமான யாவற்றையும், நம்மைச்சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேண்டும் (எபிரெயர் 12:1). பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட வேண்டும் (எபேசியர் 4:22).

**5. அர்ப்பணிப்பதன் மூலம் :**

சரீரம், ஆவி, ஆத்துமா முழுவதையும் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்யவேண்டும், அவரின் சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 12:1, 6:13; அப்போஸ்தலர் 5:32).

**6. ஜெபிப்பதன் மூலம் :**

லூக்கா 11:13; அப்போஸ்தலர் 4:31 இந்த வசனங்களில் கூறப்பட்ட காரியங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, தேவனிடத்தில் ஜெபிக்கும்பொழுது அவர் உங்களை நிரப்புவார்.

**7. விசுவாசிப்பதன் மூலம் :**

நீங்கள் ஜெபம்பண்ணும்போது . . . பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள் (மாற்கு 11:24). ஜெபித்த பிற்பாடு, ஏதாவது உணர்வு ஏற்படும் என்று காத்திருக்க வேண்டாம் தேவன் உங்களது ஜெபத்தைக் கேட்டார் என்றும், பதில் கொடுத்துவிட்டார் என்றும் நம்பி முன்னேறிச் செல்லுங்கள்.

**முடிவுரை :**

இந்தப் பாடத்தை உங்களது இருதயத்தில் தொடர்ந்து சிந்தியுங்கள். இந்தச் சத்தியங்களை வெறும் அறிவுப்பூர்வமாக மட்டுமல்ல, அனுபவப்பூர்வமாகவும் அறிந்துகொண்டதை நீங்கள் உறுதிசெய்து கொள்ளுங்கள். உண்மையாகவே ஆவியினால் நிரப்பப்பட்ட ஸ்தீரி, புருஷரை காண உலகம் ஆவலோடு இருக்கிறது. "தேவனின் கிருபையால் நான் அப்பேர்ப்பட்ட நபராகக் காணப்படுவேன்" என்று கூறுங்கள்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பரிசுத்த ஆவியானவர் (பகுதி – 3)

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. விசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் செய்யும் பணிகளில் ஏதேனும் **ஐந்தை** வசனத்துடன் வரிசைப்படுத்தவும்.

   a. ------------------------------------------------------------------------

   b. ------------------------------------------------------------------------

   c. ------------------------------------------------------------------------

   d.. ------------------------------------------------------------------------

   e. ------------------------------------------------------------------------

2. ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரால் முத்திரை போடப்பட்டோம் என்பதன் பொருள் என்ன?

   a. அவர் தேவனுக்குச் சொந்தமானவர்

   b. பிசாசு அவரைத் தொடமுடியாது

   c. மோசமான காரியம் ஒன்றும் அவருக்கு நேரிடாது

3. தண்ணீர் ஞானஸ்நானம் எதற்கு அடையாளமாக இருக்கிறது?

   a. ஒரு விசுவாசி பரிசுத்தமான மனிதர்

   b. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்

   c. ஒரு விசுவாசி சபையின் அங்கத்தினர்

4. கிறிஸ்துவை இரட்சகராக ஒருவர் ஏற்றுக்கொள்ளும்பொழுது நடப்பது என்ன?

   a. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கமாக மாறுகிறார்

   b. பரிபூரணமான வாழ்க்கை வாழ ஆரம்பிக்கிறார்

   c. சந்தோஷப்பட ஆரம்பிக்கிறார்

5. தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு நபருக்கு என்ன செய்கிறது ?

   a. ஒருவரை தேவனின் பிள்ளையாக மாற்றுகிறது

   b. ஒருவர் அந்நிய மொழியில் பேசுவதற்கு உதவுகிறது

   c. ஒருவர் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார் என்பதைக் காட்டுகிறது.

6. எபேசியர் 4:5–ல் உள்ள 'ஒரே ஞானஸ்நானம்' என்றால் என்ன?

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

7. எபேசியர் 4:5–ல் சொல்லப்பட்டுள்ள ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களுடைய வாழ்க்கையில் காணப்பட வேண்டிய **இரண்டு** அடையாளங்கள் என்ன?

   1. ------------------------------------------------------------------------------------------

   2. ------------------------------------------------------------------------------------------

8. பரிசுத்த ஆவியின் வரத்தை ஒரு விசுவாசி பெற்றுக்கொள்வது எப்படி ?

   a. அவர் மிகவும் கடினமாக ஜெபிக்கிறார்

   b. தேவன் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுக்கிறார்

   c. .அவர் பாவம் இல்லாத ஜீவியம் செய்ய வேண்டும்

9. யார் தேவனிடத்திலிருந்து வரத்தைப் பெறுகின்றனர்?

   a. ஒவ்வொரு விசுவாசியும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரங்களை தேவனிடத்திலிருந்து பெறுகின்றனர்

   b. ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் மட்டும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரங்களை தேவனிடத்திலிருந்து பெறுகின்றனர்

   c. தேவனுக்காக நிற்கும் விசுவாசிகள் மட்டுமே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரங்களை பெறுகின்றனர்

10. ஒரு விசுவாசி எதற்காக தனது வரங்களைப் பயன்படுத்த வேண்டும் ?

   a. தனது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும்

   b. தான் ஆவிக்குரிய நபர் என்பதைக் காண்பிக்க

   c. சபையின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும்

11. பாஷைகளின் வரம் என்பது என்ன? (அந்நிய மொழிகளில் அல்லது பாஷைகளில் பேசுவது)

   a. ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் கொடுக்கும் வரமாகும்

   b. ஒருவர் ஆவியானவரைப் பெற்றிருப்பதற்கு அடையாளமாகும்

   c. வரங்களில் ஒன்றாகும்

12. 1 கொரிந்தியர் 12:13–ல் காணப்படும் ஞானஸ்நானத்தை யார் கொடுப்பது ?

   ------------------------------------------------------------------------------------------

13. ரோமர் 8:16–ன் படி, விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் செய்வது என்ன ?

   ------------------------------------------------------------------------------------------

14. கீழே உள்ள வசனங்களில் சொல்லப்படும் ஞானஸ்நானத்தை எழுதவும் :

   அப்போஸ்தலர் 1:22 ----------------------------------------------------------------------

   மாற்கு 1:9,10 ----------------------------------------------------------------------

   1 கொரிந்தியர் 12:13 ----------------------------------------------------------------------

   அப்போஸ்தலர் 1:5 ----------------------------------------------------------------------

15. புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் **மூன்று** பணியை எழுதுக? ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** வேதவசனம் தருக.

a. ----------------------------------------------------------------

b. ----------------------------------------------------------------

c. ----------------------------------------------------------------

**16.** ஆவியானவரால் நிரப்பப்படுவது எப்படி என்பதற்கான **ஏழு** படிகளை வரிசைப்படுத்தவும் :

a. ----------------------------------------------------------------

b. ----------------------------------------------------------------

c. ----------------------------------------------------------------

d. ----------------------------------------------------------------

e. ----------------------------------------------------------------

f. ----------------------------------------------------------------

g. ----------------------------------------------------------------

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ________________________________________________

**முகவரி :** ________________________________________________

________________________________________________

**3.**